# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

## SC. No. 259/2023

## Deposition of witness : PW- 19

| | | | |
|---|---|---|---|
| Name : | Dr. R.ARUN GOWTHAM | Caste | - |
| S/o. | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk : | | Age : | |

Solemnly affirmed on 11.08.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.
**எதிரி ஆஜர்.**

**சாட்சி காணொளி காட்சி மூலம் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**முதல் விசாரணை :**

**1. நான் தற்பொழுது அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை திருவள்ளூரில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த நான் கடந்த 11.01.2023ஆம் தேதியன்று, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் போதகராக பணிபுரிந்த பொழுது, தாரமங்கலம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களின் பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதத்தினை, மதியம் 03.50மணிக்கு பெற்றுக் கொண்டேன். மேற்படி மதியம் 04.00 மணி அளவில் மணி வயது 55 அவரது பிரேதத்தின் பிரேத பரிசோதனை தொடங்கினேன். பிரேத பரிசோதனைக்காக தலைமை காவலர் 1145 திரு. சேகர் அவர்கள் உடன் இருந்தார்.**

2. பிரேத அங்கமச்ச அடையாளம், பிரேதத்தில் காணப்பட்ட அங்கமச்ச அடையாளங்களை சரிபார்த்து, பிரேத பரிசோதனை அன்றே 04.00 மணிக்கு தொடங்கினேன். பிரேத பரிசோதனையின் பொழுது பிரேதத்தில் மரண விரைப்புத்தன்மை காண இயலவில்லை. மிதமான ஊட்டத்துடன் பிரேதம் ஆனது காணப்பட்டது. பிரேதத்தில் கை மற்றும் கால் நகங்கள் வெளிறியில் காணப்பட்டது. பிரேதத்தில் உள்ளங்கைகள் மற்றும் உள்ளங்கால்கள் நீர் கோர்த்து காணப்பட்டது. உள்ளாடை காணப்பட்டது. பிரேதத்தின் மீது ஆங்காங்கே தோல் உரிந்து காணப்பட்டது.

**3. பிரேதத்தின் மீது இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு,** அட்டவணையில் காயங்களின் விபரங்கள் மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் தமிழாக்கம் அட்டவணையில் பின்வருமாறு குறிப்பிடுகிறேன்.

| காயம் எண் | Injury ஆங்கிலத்தில் அதுபற்றிய விளக்கம் | தமிழில் அது பற்றிய விளக்கம் |
|---|---|---|
| **a** | **Lacerations of size** | **கிழிந்த காயத்தின் அளவு** |
| 1 | 6x1 cm x scalp deep noted over mid parietal region | கிழிந்த காயம் மண்டை தோலின் ஆழம் வரையில் நடு உச்சி மண்டையில் காணப்பட்டது. |
| 2 | 4x2 cm x scalp deep, 2x1 cm x scalp deep, 4x2 cm x bone deep noted over mid occipital region | இரண்டு கிழிந்த காயங்கள் மண்டை தோல் அளவிற்கான ஆழத்தில் மற்றும் மூன்றாவது கிழிந்த காயம் கபால எலும்பு வரையிலான ஆழத்தில் காணப்பட்டது. நடு பின் |

| | | |
|---|---|---|
| | | மண்டையில் அவை காணப்பட்டது. |
| 3 | 4x2x1 cm noted just above right eyebrow | கிழிந்த காயம் வலது புருவத்தின் மீது காணப்பட்டது. |
| 4 | 2x1x1 cm noted just below right eye | கிழிந்த காயம் வலது கண்ணிற்கு கீழ் காணப்பட்டது. |
| **b)** | Reddish abrasions of size 2x2 cm noted over right forehead, 1x1 cm noted over left forehead | சிவப்பு நிற சிராய்ப்பு காயம் வலது நெற்றியில் காணப்பட்டது. மற்றொரு சிவப்பு நிற சிராய்ப்பு காயம் இடது நெற்றியில் காணப்பட்டது. |
| **c)** | Cut injury of size 18x3 cm x bone deep noted over part of front and sides of neck with surrounding tissue contusion. | வெட்டுக்காயம், எலும்பு ஆழம் வரையில் கழுத்தின் மேல் பகுதி மற்றும் முன்பகுதி மற்றும் பக்கவாட்டு பகுதியில் காணப்பட்டது. அதை சுற்றி உள்ள தசைகளில் கன்றிய காயங்கள் காணப்பட்டது. |

**4. பிரேதத்தில் இறப்பிற்குப் பின் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு :**

a) வலது கை வலது தோள்பட்டையிலிருந்து தனியாக காணப்பட்டது. வலது கை மீதமுள்ள உடல் பகுதியுடன் ஒத்து போய் காணப்பட்டது. துண்டாக வெட்டப்பட்ட இரண்டு முனைகளும் வெளிரி காணப்பட்டது.

b) இடது கை இடது தோள்பட்டையில் இருந்து தனியாக காணப்பட்டது. இடது கை மற்றும் மீதமுள்ள பகுதிகள் ஒத்துபோய் காணப்பட்டது. துண்டாக வெட்டுப்பட்ட இரண்டு முனைகளும் வெளிரி காணப்பட்டது.

c) வலது கால் கால் முட்டியிலிருந்து துண்டாக தனியாக காணப்பட்டது. வலது கால் மற்றும் மீதமுள்ள உடல் பகுதி ஒத்துப்போய் காணப்பட்டது. துண்டான இரண்டு முனைகளும் வெளிரி காணப்பட்டது.

d) இடது கால் கால் முட்டியிலிருந்து துண்டாக தனியாக காணப்பட்டது. இடது கால் மற்றும் மீதமுள்ள உடல் பகுதி ஒத்துப்போய் காணப்பட்டது. துண்டான இரண்டு முனைகளும் வெளிரி காணப்பட்டது.

e) தொப்புள் அளவில் உடல்கள் இரண்டாகக் காணப்பட்டது. இரண்டு பாகங்களும் ஒத்துப்போய் காணப்பட்டது. துண்டான இரண்டு முனைகளும் வெளிரில் காணப்பட்டது.

5. தலையை கூராய்வு செய்து பார்த்த பொழுது மண்டை தோளில் 3x3 சென்டிமீட்டர் அளவில் நடு உச்சி மண்டையில் கண்றிய காயம் காணப்பட்டது. மற்றும் 4x3 சென்டிமீட்டர் அளவில் வலது முன் மண்டை தோளில் கண்றிய காயம் காணப்பட்டது மற்றும் 3x3 சென்டிமீட்டர் அளவில் நடு பின் மண்டையில் கன்றிய காயம் காணப்பட்டது. மண்டை ஓடு சீராக காணப்பட்டது. மூளை அழுகிய நிலையில் காணப்பட்டது. ஆங்காங்கே ரத்தம் காணப்பட்டது.

6. மண்டை ஓட்டின் கபால அடிப்பகுதியில் இடது பக்க நடு கபாலக்குழி முறிந்து காணப்பட்டது. கழுத்துப் பகுதியை கூறாய்வு செய்து பார்த்த பொழுது, கழுத்துப்பகுதியை சுற்றி உள்ள தசைகள் சீராக காணப்பட்டது. நாவடி எலும்பு சீராக காணப்பட்டது. குரல் வளையம் மற்றும் சுவாசக்குழாய் அழுகிய நிலையில் காணப்பட்டது. நெஞ்சுப் பகுதியை கூறாய்வு செய்து பார்த்த பொழுது, இரண்டு பக்க விலா எலும்புகளும் சீராக காணப்பட்டது. நெஞ்சு பகுதியில் எவ்விதமான திரவமும் காணப்படவில்லை. இரண்டு நுரையீரல்களும் அழுகிய நிலையில் காணப்பட்டது.

7. இருதயம் அழுகிய நிலையில் காணப்பட்டது. வயிற்றை கூராய்வு செய்து பார்த்ததில், இரைப்பையில் எவ்வித திரவமும் இல்லை. சிறுகுடலில் 10 மில்லி அளவிற்கு பித்தம் காணப்பட்டது. அதில் எவ்விதமான நெடியும் இல்லாமல் காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகம் அழுகிய நிலையில் காணப்பட்டது. மூத்திரப்பையில் எவ்வித திரவமும் இல்லை. இடுப்பு எலும்புகள் சீராக காணப்பட்டது. விதைப்பை அழுகி காணப்பட்டது.

8. உடல் உள்ளுறுப்புகள் சேகரம் செய்யப்பட்டு ரசாயன பகுப்பாய்விற்காக அனுப்பப்பட்டது. ரத்த மாதிரிகள் ரத்த வகைப்பாட்டிற்காக அனுப்பப்பட்டது. ரசாயன பகுப்பாய்வின் ஆய்வறிக்கைக்காக கருத்துரை நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது. ரசாயன பகுப்பாய்வின் ஆய்வறிக்கை பெற்று, கழுத்தில் ஏற்பட்ட வெட்டுக்காயத்தின் விளைவாக, ஏற்பட்ட உடல் அதிர்ச்சி மற்றும் அதிகப்படியான ரத்தப் போக்கு காரணமாக அவர் இறந்திருக்க கூடும் என கருத்துரை வழங்கியுள்ளேன். இறந்த நபர் பிரேத பரிசோதனைக்கு முன்பு மூன்றிலிருந்து ஐந்து நாட்களுக்கு முன்பு இறந்திருக்கலாம் என கருத்துரை வழங்கினேன். இறந்த நபர் இறப்பிற்கு முன் எத்தில் ஆல்கஹால் பருகியுள்ளதற்கான தடயம் இருந்துள்ளது. அவர் இறந்த பிறகு தடயங்களை மறைப்பதற்காக இறந்து போனவரது உடலில் உள்ள கை கால்கள் மற்றும் உடல் பகுதிகள் துண்டுகளாக வெட்டப்பட்டு, மறைப்பதற்காக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்ட விபரம் பிரேத பரிசோதனையின் போது உடல் பாகங்களை வைத்து தெரிந்து கொள்ள முடிந்தது.

9. கழுத்தில் ஏற்பட்டுள்ள வெட்டுக்காயத்தினால் அவரது இறப்பு ஏற்பட்டுள்ளது நீதிமன்றத்தில் காண்பிக்க கூடிய, கத்தி மற்றும் கொடுவாளால் இவ்வகையான காயங்கள் இறந்தவர் உடலில் ஏற்பட வாய்ப்பு உண்டு. அவரது உடல் பாகங்களும், மேற்கண்ட ஆயுதங்களால் துண்டாக்க வாய்ப்புண்டு. நான் வழங்கிய **பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.9** ஆகவும், **விசரா அறிக்கை அ.த.சா.ஆ.10** ஆகவும், **இறுதி கருத்துரை அ.த.சா.ஆ. 11** ஆகவும், **பயாலஜி அறிக்கை அ.த.சா.ஆ.12** ஆகவும், அரசு மருத்துவமனையில் வழங்கிய **விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.13** ஆகவும்

குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

10. இறப்பதற்கு முன்பு ஏற்பட்டதாக சொல்லப்படும் தலையில் ஏற்பட்டுள்ள நான்கு காயங்களானது, குடிபோதையில் இரண்டு நபர்கள் சண்டை போட்டுக்கொண்டு, ஒரு கடினமான கல் மீது, இறந்து போனவர் தலையில் அடிபட்டு கீழே விழும் பொழுது, இவ்வாறான காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் வாய்ப்பு உள்ளது. இறந்தவரது கண்கள் இரண்டும் திறந்த நிலையில் பிரேத பரிசோதனையின் போது இருந்ததா என்றால், அது பற்றி சரியாக ஞாபகம் இல்லை. பொதுவாக அது குறித்து நாங்கள் பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பது கிடையாது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி காணொளி மூலம் சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, இ–மெயில் மூலம் அனுப்பபட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/-Swarnam J. Natarajan, M.L.,

முதன்மை மாவட்ட நீதிபதி, சேலம்